NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 4 June 2022

## செய்திக்கொத்து

# தெம்புசு கல்லூரித் தலைவர் டோமி கோவுக்குப் பிரியாவிடை

மூத்த அரசதந்திரியும் 2011ஆம் ஆண்டு சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் தெம்புசு கல்லூரியை நிறுவி அதனை வழிநடத்தி வந்தவருமான பேராசிரியர் டோமி கோ இம்மாத இறுதியில் அந்தப் பொறுப்பில் இருந்து ஓய்வுபெறவிருக்கிறார்.

சிங்கப்பூரின் பொதுத் தூதருமான இவர், பொறுப்புகளைத் தம்மைவிட இளையவர்களிடம் ஒப்படைப்பதே சரியான செயல் என்று கருதுவதாகக் கூறினார். தெம்புசு கல்லூரியில் பேராசிரியர்கள் மாணவர்களுடன் ஒரே கூரையின்கீழ் தங்கி கற்பிக்கும் நடைமுறை பின்பற்றப்படுகிறது. சிங்கப்பூரின் அத்தகைய முதல் இரண்டு கல்லூரிகளில் இதுவும் ஒன்று.

மாணவர்களுடன் இனி அதிகம் தொடர்புகொள்ள முடியாது என்பதே தமக்கு வருத்தமளிக்கும் என்றார் பேராசிரியர் கோ. 84 வயதாகும் இவர், சென்ற மார்ச் மாதம் லீ கொங் சியன் இயற்கை வரலாற்று அரும்பொருளகம், அனைத்துலகச் சட்ட நிலையம் ஆகியவற்றின் தலைமைப் பொறுப்புகளில் இருந்தும் விலகிக்கொண்டார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.